Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 164

செவ்வாய்க்கிழமை 09 மே 2023

சித்திரை 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# மாணவர்களுக்கு இனிப்புக்கொடுத்து வெள்ளைவானில் கடத்த முயற்சி!!!

## மன்னாரில் இரு நாள்களில் இரு சம்பவங்கள் பதிவு

**மன்னார், மே 9**

**மன்னாரில் மாணவர்களை இலக்கு வைத்து வெள்ளைவான் கடத்தல் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு நாள்களில் இருவேறு இடங்களில் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.** »10

## மன். மாவட்டச் செயலரின் கணவருக்கு வளைந்துகொடுக்கும் கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 9
மன்னார் மாவட்டச் செயலரின் கணவர் என்பதால் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தனது விதிமுறைகளைத் தானே மீறியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத் »11

## ஆளுநர் அலுவலகத்தினுள் தனியார் நிறுவன நிகழ்வு!

### எல்லைமீறுகிறது ஆளுநரின் அதிகாரத் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், மே 9
வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் தனியார் நிறுவனத்தின் பரிசளிப்பு நிகழ்வு »11

## ஆளுநர் நியமனங்கள் விரைவில் நடக்கும்!!!

### ஐ.தே.க.வினருக்கே வாய்ப்பு என்கிறார் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, மே 9
மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நியமனம் விரைவில் இடம்பெறும் என எதிர்பார்க்கிறேன். ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த மற்றும் »10

## கோதுமை மா, சீனி விலை அதிகரிப்பு

### பேக்கரி உற்பத்திப்பொருள்கள் விலையில் மாற்றமில்லையாம்

கொழும்பு, மே 9
கோதுமை மா மற்றும் சீனியின் விலை என்பன அதிகரிக்கப்பட்டிருந்தாலும் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளில் எந்தவொரு மாற்றமும் மேற்கொள்ளப்படாது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜெயவர்த்தன தெரிவித்தார். »11

## பதவி துறக்குமாறு யாரும் சொல்லவில்லை

### வடக்கு ஆளுநர் ஜீவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9
என்னைப் பதவியிலிருந்து விலகுமாறு எந்தவொரு அறிவுறுத்தலும் ஜனாதிபதி தரப்பி »11

## இரண்டு நிபந்தனைகளுடன் பேசச் செல்கிறது தமிழ் அரசு

யாழ்ப்பாணம், மே 9
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெறவுள்ள நிலை »10

## பிரபாகரனும் முன்னணியும் தனித்தவில்தான்

### கூறுகிறார் அந்தக் கட்சியின் செயலர் கஜேந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 9
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனும் தனித்தவில்தான். அவரது வழியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தனித்தவில்தான் – இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் தெரிவித்தார். »11




## முள்ளிவாய்க்கால் கஞ்சிவழங்கல் தமிழர் தாயகத்தில் இன்று ஆரம்பம்

### வல்லையில் தலைவர் பிரபாவின் வீட்டுக்கு முன்னால் தொடக்கம்

யாழ்ப்பாணம், மே 9
2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப்போரில் கொன்றொழிக்கப்பட்ட உறவுகளை நினைவுகூர்ந்து கடைப்பிடிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் ஓர் அங்கமான 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கல் இன்று »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது
ரூ.120,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
Fitch Rating: "A –" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவழிப்பு வரலாற்றை ஊடுகடத்த

# தாயகமெங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சி!

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 9**

**ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டமையை நினைந்து அஞ்சலிக்கும் முகமாகவும், தமிழினப் படுகொலை வரலாற்றை இளம் சந்ததியினருக்கு ஊடுகடத்தும் விதமாகவும் இன்றுமுதல் எதிர்வரும் 15ஆம் திகதிவரை தமிழர் தாயகத்தின் பல பகுதிகளுக்கும் பயணப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்படும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களப் பேரினவாதத்தின் இனவழிப்பு 2009ஆம் ஆண்டில் உச்சத்தைத் தொட்டபோது முழு உலகமும் சிங்கள வல்லாதிக்கத்துடன் கைகோர்த்து எமது இனம் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டதை வேடிக்கை பார்த்தன. 1948ஆம் ஆண்டுமுதல் தமிழர்களுக்கு எதிராக ஆரம்பித்த இந்த இனப்படுகொலை நடவடிக்கைகள் 1958, 1976, 1983, 2009 என்று பல்வேறு கட்டங்களில் அதிதீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. நவாலி தேவாலயம், செஞ்சோலை என இனவழிப்பின் கரங்கள் நீண்டன. 2006ஆம் ஆண்டு எட்டாம் மாதம் தமிழினத்தை அழித்தொழிப்பதற்காக சிங்களப் பேரினவாதத்தால் தொடங்கப்பட்ட யுத்தத்தில், சர்வதேசத்தில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகள், இரசாயன ஆயுதங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுடன். உணவுத்தடை, மருந்துத்தடை என்பனவும் தமிழர் தாயகத்துக்கு விதிக்கப்பட்டன. போர் யுத்தியாக இவை பயன்படுத்தப்பட்டன.

விடுதலைக்காக உயிரைத் துச்சமாக மதித்து களத்தில் நின்ற எமது மக்கள் பட்டினிச் சாவினை எதிர்கொள்ளக் கூடாது என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், விடுதலை சார்ந்த அமைப்பும் தம்மிடம் இருந்த அரிசியினை பங்கிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியாகக் காய்ச்சி, அதை மக்களுக்கு வழங்கி, மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காத்தனர். எறிகணைகளும் கொத்துக் குண்டுகளும் எமது மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றபோதும் பட்டினியால் மக்கள் இறக்கவில்லை.

இந்த உயிர்காத்த கஞ்சியினையே இன்று நாம் எமது உரிமைப் போராட்டத்தின் ஒரு வடிவமாக, எமது மக்களின் மீதான இனவழிப்புக்காகச் சர்வதேசத்திடம் நீதி தேடவேண்டிய ஒரு கருவியாக கடத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். நாம் எமது இனவிடுதலையை அடையும் வரை இக்குறியீடு கடத்தப்படும் என உறுதியெடுக்கின்றோம்.

நாம் முன்னெடுக்கும் இந்தச் செயற்பாட்டில் அனைத்துத் தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்களின் மாவட்டத்துக்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கஞ்சிக்கு உரிய அரிசி மற்றும் இதர பொருள்களை வழங்கி விடுதலைக்கான பயணத்தில் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றனர். (ம-26)



## ஹர்ஷ டி சில்வாவுக்கு 'கோபா'வின் தலைமை

### லக்ஷ்மன் கிரியெல்ல அழுத்தம்

கொழும்பு, மே 9

நாடாளுமன்ற அரச நிதிக்குழுவின் (கோபா) தலைவர் பதவி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற அரச நிதிக்குழுவுக்கு, எதிர்க்கட்சிக்கு நம்பிக்கையான ஒருவரை நியமிக்குமாறு எதிர்க்கட்சியால் விடுக்கப்பட்ட கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படாமல் இருப்பது தொடர்பாக வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்ற அரச நிதிக்குழுவின் (கோபா) தலைவர் பதவி நிலையியற் கட்டளையின் பிரகாரம் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கே வழங்கப்படவேண்டும். ஆனால் அரசாங்கம், அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படும் எதிர்க்கட்சி உறுப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. தலைவர் பதவி எமக்கு நம்பிக்கையான ஒருவருக்கே வழங்கப்படவேண்டும். அத்துடன் கோபா குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வாவை நியமிக்குமாறு நாங்கள் பல தடவைகள் அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிறோம்.

ஆனால், அரசாங்கம் அதனைத் திட்டமிட்டு நிராகரித்து வருகிறது. ஜனாதிபதியால் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னர் ஹர்ஷ டி சில்வாவே அதன் தலைவராக இருந்து, சிறந்த முறையில் அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றிருந்தார். அரசாங்கம் இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாமலே தற்போது அரசாங்கத்துக்குத் தேவையான ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த அரசாங்கம் கோத்தாபய ராஜபக்சவின் வழியிலேயே தொடர்ந்து செல்கிறது. அந்த அரசாங்கத்தில் இருந்தவர்களே தற்போதும் இருக்கின்றனர். ஜனாதிபதி மாத்திரமே அதில் மாற்றம். அதனால் அவர்கள் எப்போதும் ஊழல் மோசடிகளுக்குத் துணைபோகக்கூடிய ஒருவரையே நியமித்துக்கொள்ள முயற்சிப்பார்கள்.

எனவே, நிலையியற் கட்டளையின் பிரகாரம் எமக்குக் கிடைக்கவேண்டிய அரச நிதிக்குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு நம்பிக்கையான ஒருவருக்கு வழங்கவேண்டும். இல்லாவிட்டால் சர்வதேசத்திடம் முறையிட்டாவது எமது உரிமையைப் பெற்றுக்கொள்ளவேண்டி ஏற்படும் - என்றார். (ம-14-இ)

## மேற்குலகின் சொல் கேளாததாலேயே விரட்டப்பட்டாராம் கோத்தாபய!

### கதை சொல்கின்றார் வீரசிங்க

கொழும்பு, மே 9

மேற்கு நாடுகளுக்குத் தேவையான வகையில் செயற்படாததால்தான் மஹிந்த, கோத்தாபய ஆகியோர் பதவிகளில் இருந்து விரட்டப்பட்டனர் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பல சந்தர்ப்பங்களில் இந்த நாடு சர்வதேச அழுத்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றது. போர்க் காலத்திலும் அப்படித்தான். போரை நிறுத்துமாறு பல நாடுகள் அழுத்தம் கொடுத்தன. அதை முறியடித்ததால்தான் போரை வெற்றிகொள்ள முடிந்தது. பொருளாதாரப் பிரச்சினை தலைதூக்கியபோது மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினர். இந்த மக்களின் போராட்டத்தைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் சிலர் நடவடிக்கை எடுத்தனர். ஆனால், அவர்களால் அந்த இலக்கைப் பூரணப்படுத்தமுடியவில்லை. மேற்கு நாடுகளுக்குத் தேவையான வகையில் செயற்படாததால் மஹிந்த, கோத்தாபய ஆகியோர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இது தொடர்பில் விமல் வீரவன்ஸ கூறிய விடயங்களில் நாம் உடன்படுகின்றோம். மஹிந்த, கோத்தாபய ஆகியோர் பதவியில் இருந்து விலகியதும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரை அழைத்துப் பதவியை ஏற்குமாறு கூறினோம். அவர்கள் வரவில்லை. இறுதியில் ரணிலே பாரமேற்றார். இன்று அரசியல் உறுதித்தன்மை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி எமக்குக் கிடைத்தது - என்றார். (ம-22)

## 15 கோடி பெறுமதியான தங்கம்; கட்டுநாயக்காவில் ஒருவர் கைது!

7 கிலோ எடையுள்ள 15 கோடியே 25 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்துடன் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்

கொழும்பு - மருதானை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். விமான நிலையத்திலிருந்து வெளியேசெல்லும்போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டார்.

அவரது இடுப்பில் 8 பொதிகளில் மறைத்து வைத்திருந்த நிலையில் 4 கிலோ 400 கிராம் எடையுடைய 42 தங்க பிஸ்கட், அரை தங்க பிஸ்கட் மற்றும் 2 கிலோ 600 கிராம் எடையுள்ள நகைகள் என்பன அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. (ஒ-14-இ)

## வடக்கு - கிழக்கில்

# இராணுவ மயமாக்கல்தான் பிரச்சினைக்குக் காரணம்!

### ஜெயபாலன் குரூஸ் அடிகளார் சுட்டிக்காட்டு

மன்னார், மே 9

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பிரச்சினைகள் தலைதூக்கப்படுவதன் முக்கியமான காரணம் இராணுவ மயமாக்கலே ஆகும். ஆகவே எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக ஒரே குரலில் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவேண்டும்.

இவ்வாறு சமூகச் செயற்பாட்டாளரான அருட்பணி ஆ. ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்குள்ள பிரச்சினைகளுக்கு முக்கியமான காரணமாக இருப்பது பௌத்தமயமே எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பௌத்தமயமாக்கலுக்குக் காரணம் இராணுவமயமே என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தேவைகளுக்கு அதிகமாக இராணுவம் நிலை கொண்டு ஒரு நாடுகளிலும் இல்லாதவாறு இவர்கள் சிவில் விடயங்களிலும் மக்களின் சொந்த விடயங்களிலும் மூக்கை நுழைத்துக் கொண்டு செயற்படுகின்றனர். எந்த நாடுகளிலும் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பொலிஸாரே செயற்படுகின்றனர். ஆனால் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நிலைகொண்ட இராணுவம் யுத்தம் முடிந்தபின் இன்றும் நிலைகொண்டுள்ளது. இராணுவ மயமாக்கலால்தான் பிரச்சினைகள் தலைதூக்குகின்றன - என்றார். (ம-14-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாரப்பகிர்வுப் பேச்சுக்கு இது தருணம் இல்லையாம்!

## ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு

**கொழும்பு, மே 9**

**அதிகாரப்பகிர்வு, காணாமலாக்கப்பட்டோர் போன்ற பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகள் வடக்கில் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அவை தொடர்பில் பேசுவதற்கு இது தருணமல்ல. நாட்டின் தற்போதைய நிலைமையில் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கே முன்னுரிமையளிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

வடக்கு அபிவிருத்தி, அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலுக்கு தமிழ்க் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் நாட்டில் தற்போதைய பிரதான பிரச்சினை என்ன என்பதை ஜனாதிபதி உணரவேண்டும். அதிகாரப்பகிர்வு தொடர்பாகப் பேசுவதற்குப் பதிலாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கே முன்னுரிமையளிக்கப் படவேண்டும்.

முக்கியத்துவமுடைய அத்தியாவசிய காரணிகளைப் புறந்தள்ளி அதிகாரப்பகிர்வு தொடர்பாகப் பேசுவதற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளமையானது, ஜனாதிபதி பிறிதொரு இலக்கை நோக்கிப் பயணிக்க முயற்சிக்கின்றார் என்றே தோன்றுகிறது.

பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி முன்னுரிமையளிப்பாரானால் அதுவே சிறந்த தீர்மானமாகும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதேபோன்று தமிழ்க் கட்சிகளும் இதன் அடிப்படையிலேயே சிந்திக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# மஹிந்தவை மீண்டும் பிரதமர் ஆக்குவோம்!

## பெரமுன கூறுகின்றது

கொழும்பு, மே 9

அரசியல் சூழ்ச்சி, அரசியல் நெருக்கடி போன்றவற்றின் ஊடாக மஹிந்த ராஜபக்சவைப் பிரதமராக்கவேண்டிய தேவை கிடையாது. மக்களாணையுடன் மீண்டும் அவரைப் பிரதமராக்குவோம். பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்பவரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தவேண்டிய தேவை தற்போது கிடையாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவைப் பிரதமராக நியமிக்க கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

பெரும்பான்மைப் பலத்தை வைத்துக் கொண்டு கட்சி என்ற ரீதியில் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளோம். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை நாங்களே தெரிவு செய்தோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளமை அவரது தனிப்பட்ட கருத்தாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டால் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கலாம்.

அமைச்சரவை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. நிலையான அமைச்சரவை ஒன்றை அமைக்கும்போது பொதுஜன பெரமுனவின் 8 சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும் என ஜனாதிபதியிடம் இருமுறை எழுத்து மூலமாக வலியுறுத்தினோம். ஆனால் இதுவரை அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இதுவரை நிலையான அமைச்சரவை அமைக்கப்படவில்லை. அமைச்சரவை தொடர்பில் இனி கட்சி மட்டத்தில் ஜனாதிபதியுடன் எவ்வித பேச்சுக்களிலும் ஈடுபடப் போவதில்லை. அமைச்சுப் பதவி இல்லாவிடினும் அரசாங்கத்தின் சிறந்த தீர்மானங்களுக்கு கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (எ-இ)

# ரணிலுக்கு 'மவுசு'

கொழும்பு, மே 9

மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வரும் அரசியல்வாதிகளின் பட்டியலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலிடத்தைப் பிடித்துள்ளார் எனவும், கட்சிகளின் பட்டியலில் ஜே.வி.பி. முதலிடத்தில் உள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

சமகால அரசியல் நிலைவரம் மற்றும் மக்களின் நிலைப்பாடு என்னவாக உள்ளது என்பது தொடர்பில் அரச நிறுவனமொன்று அண்மையில் நடத்திய கருத்து கணிப்பிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அரசியல்வாதிகளுள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 33 வீதமானோரும், அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 16 வீதமானோரும், சஜித் பிரேமதாஸவுக்கு 12 வீதமானோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். கட்சிகளுக்கான செல்வாக்குப் பட்டியலில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) முன்னிலையில் உள்ளது.

அந்தக் கட்சிக்கு மக்கள் மத்தியில் 21 சதவீத ஆதரவு கிடைத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்திக்கு 17 வீதமும், பெரமுனவுக்கு 15 வீதமும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 11 வீதமும் மக்கள் மத்தியில் ஆதரவு உள்ளதெனக் கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

'ஹெலிகொப்டர்' கூட்டணிக்கு 5 சதவீத ஆதரவும், சுதந்திரக்கட்சிக்கு 4 சதவீத ஆதரவும் கிட்டியுள்ளது. சுமார் 24 வீதமானோர் கட்சி சார்பற்ற கொள்கையில் உள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. (எ-44)




**தென்மராட்சியில கிட்டடியில ஒரு வீடுகுடி புகுந்தவை. வழக்கமா அந்தப் பகுதியில உள்ள கோயிலில்ல தான் சாமிப்படங்களை வைச்சு, அதை வீட்டை எடுத்துக்கொண்டந்து சாமியறையில வைக்கிறவை. அப்பிடிச் சாமிப்படம் வைக்கேக்குள்ள கோயில் ஐயர் பூசை செய்துதான் அந்தப் படங்களைக் குடுப்பார்.**

**அந்த வழக்கத்தின்படி இந்த வீடுகுடிபூரல் காரரும், தங்கட சாமிப்படங்களை அந்தக் கோயில்ல வைச்சு எடுத்தவை. குடிபூரல் முடிஞ்சு அடுத்த நாள் கோயிலுக்கு நித்திய பூசை செய்யிறதுக்கு போயிருக்கிறார் ஐயர். அண்டைக்கு என்டைக்குமில்லாத விநோதமா கோயில் நிர்வாகக்காரர் எல்லாரும் கோயில் வாசலில நிண்டிருக்கினம். 'எதுக்கு இவை வந்திருக்கினம்?' எண்டு யோசிச்சபடியே ஐயர் கோயிலுக்குள்ளபோக வெளிக்கிட்டிருக்கிறார். அப்பதான் ஐயரின்ர தலையில இடி விழுந்தமாதிரி ஒரு தகவலை நிர்வாகக்காரர் சொல்லியிருக்கினம்.**

**ஐயா, இனி எங்கட கோயில்ல நீங்கள் பூசை செய்யவேண்டாம் எண்டு நிர்வாகக்காரர் சொன்னவுடன, ஐயருக்கு தலை சுத்தத் தொடங்கிட்டுது.**

**என்ன இப்பிடித் திடீரெண்டு சொல்லுறியள்? பத்து வருசமா கோயில் பூசையில ஒரு பிழையும் நடக்கேலையே. எல்லாம் சிறப்பாத்தானே செய்யிறன் எண்டு நீங்களே சொன்னனீங்களே எண்டு ஐயர் காரணம் கேட்டிருக்கிறார். அதுக்கு அவை சொன்ன காரணத்தைக் கேட்டு, ஐயருக்கு என்ன செய்யிறதெண்டே தெரியாமப்போட்டுது.**

**நேற்று நீங்கள் வேற சாதிக்காரரின்ர குடிபூரலுக்கு எங்கட கோயில்ல படம் வைச்சுக் குடுத்து இருக்கிறியள். அதாலதான் பூசை செய்யாமல் உங்களை நிப்பாட்டுறதெண்டு முடிவெடுத்திருக்கிறம்.**

**சாமிப்படம் வைச்சுக் குடுத்தது ஒரு குற்றமா? எண்டு ஐயர் கேக்க,**

**சாமிப்படம் வைச்சு எடுத்தது குற்றமில்லை, அந்தச் சாதிக்காரர் தந்த சாமிப்படத்தை வைச்சது குற்றம் தான் எண்டு நிர்வாகக்காரர் கடுமையாச் சொல்லியிருக்கினம். அதுக்குப் பிறகு அந்த ஐயர் என்னத்தைக் கதைக்க? 'சாமிப்படத்திலையும் சாதிபாக்கிறவையோட கதைச்சு பிரியோசனமில்லை' எண்டிட்டு தலையைக் குனிஞ்சபடி வந்திட்டாராம்.**

**என்னதான் சந்திரனில போய் காலடி வைச்சு அம்பதென்ன ஆயிரம் வருசம் சென்டாலும்கூட ஏதோ ஒருவகையில சாதி எண்ட சனியன் இஞ்ச சுத்திக்கொண்டு தான் இருக்கும்போல.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் மாநாடு

யாழ்ப்பாணம், மே 9
இலங்கை கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 79 ஆவது தேசிய இளைஞர் சம்மேளன மாநாடு, யாழ்.மறை மாவட்டத்தில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்துள்ளது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் இளைஞர் சம்மேளனத்தின் கொழும்பு துணை மறைமாவட்ட ஆயர் கலாநிதி அன்ரன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் மாநாடு ஆரம்பமானது.

இதில் யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு ஞானப்பிரகாசம் ஆண்டகை, இலங்கை கத்தோலிக்க இளையோர் சம்மேளனத்தின் இயக்குநர் அருட்தந்தை பலனபீரிஸ் அடிகளார், மறை மாவட்டங்களில் உள்ள இளைஞர் பணிக்குப் பொறுப்பாக உள்ள அருட்தந்தையர்கள், மறை மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ், சிங்கள இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14,56)

# சிறப்புச்சொற்பொழிவு

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சிறப்புச்சொற்பொழிவினை இளம்சைவப்புலவர் த.மனோஜ்குமார் 'சைவ நாற்பாதமும் சைவ வாழ்வியலும்' என்னும் தொனிப் பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ.பால.திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவினை இளம்சைவப்புலவர் க.கயிலைவாசன் 'சிவ பூஜைக்கு உரிய மலரை முகர்ந்த மனைவியின் கையை வெட்டிய நாயனார்' என்ற தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

# தனியார் 'கிளினிக்கில்' கத்தியைக் காட்டி கொள்ளை

மன்னார், மே 9
நானாட்டான் பிரதேசத்தில் தனியார் கிளினிக்குள் புகுந்த கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் அங்கிருந்தவர்களின் நகைகள் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு நானாட்டான் புளியடியில் அமைந்துள்ள கிளினிக்கிலேயே இந்தச் சம்வம் நடைபெற்றுள்ளது.

கிளினிக் வளாகத்தினுள் நுழைந்த இரண்டு பேர் சிங்களத்திலும் தமிழிலும் உரையாடியவாறு, மருத்துவரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் மற்றும் கையில் அணிந்திருந்த மோதிரம் அங்கிருந்த பெண்களின் நகைகள் போன்றவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இதன்போது மருத்துவரின் மூக்குக் கண்ணாடி உடைந்ததில் அவருக்கு முகத்தில் காயங்களும் ஏற்பட்டுள்ளன. கொள்ளைச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-213)

# மீனவரின் பிரச்சினைகளில் டக்ளஸ் அசமந்தப்போக்கு

## சாள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

மன்னார், மே 9

**கடந்த காலங்களிலிருந்த கடற்றொழில் அமைச்சர்களை விட இன்றைய கடற்றொழில் அமைச்சர் மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அசமந்தப் போக்கைக் காண்பித்து வருகின்றார் - இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



மன்னார் மாவட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறலைத் தடுப்பதற்கான எனது முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. மன்னார், முல்லைத்தீவு மீனவர்களின் தொடர்ச்சியான முறையீடுகளாலேயே இந்திய மீனவர்கள் தொடர்பாகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கடந்த காலங்களிலிருந்த கடற்றொழில் அமைச்சர்களை விட இன்றைய கடற்றொழில் அமைச்சர் அசமந்தப் போக்கைக் காண்பித்து வருகின்றார். இந்திய இழுவைப்படகு தொடர்பாக நாடாளுமன்றத்தில் எம்மால் குரல் எழுப்பப்பட்டபோதும் அமைச்சர் அலிசப்ரி இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடியில் ஈடுபட பாஸ் அனுமதி கொடுப்பதற்கு ஆலோசனை செய்யப்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

இதை நான் நாடாளுமன்றத்திலே எதிர்த்தவன். தொடர்ந்து இது தொடர்பாக ஜனாதிபதியை சந்தித்தபோது, மீனவர்களுக்கு விருப்பம் இல்லாததை இவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப் போவதில்லையென அவர் எனக்கு நேரடியாகத் தெரிவித்திருந்தார். மேலும் மன்னார் தீவில் காற்றாலை அமைக்கப்படுவது தொடர்பாகவும் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடினேன்.

இது தொடர்பில் மன்னார் பிரஜைகள் குழு உட்பட பொது மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஜனாதிபதியிடம் நேரம் கேட்டிருந்தேன். அதற்கு ஜனாதிபதி எமக்கு நேரம் ஒதுக்கி இருந்தார். ஆனால் பிரஜைகள் குழு அந்த நேரம் தங்களுக்கு பொருத்தமில்லை யெனத் தட்டிக்கழித்து விட்டது. அதன்பின் ஜனாதிபதியுடன் மீண்டும் தொடர்பு கொள்ளவில்லை - என்றார். (ம-14,60)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் தாமதமாகும்.

**மிதுனம்:** சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்து இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். செலவுகளிலும் சற்றுக் கவனம் செலுத்துவது நல்லது. சிலருக்கு பிள்ளைகள் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சஜித் அறியாத மர்மம்!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மதப் பிரச்சினைகள் அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றன. இதன் பின்னணி மர்மமாக உள்ள நிலையில், இந்த மதப் பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்து உடனடியாகத் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்றவாறாக வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராகவும், கந்தரோடையில் அமைக்கப்படவுள்ள விகாரைக்கு எதிராகவும் கடந்த ஒருவாரமாக யாழ்ப்பாணத்தில் தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. மட்டுமல்லாமல் வவுனியா வெடுக்குநாறிமலை, முல்லைத்தீவு ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் என்று இந்த வருடம் ஆரம்பித்ததில் இருந்து வடக்கிலும் கிழக்கிலும் 'பௌத்த பேரினவாத சித்தாந்தத்துக்கு' எதிராக கண்டனங்களும் ஆர்ப்பாட்டங்களுமே எஞ்சிநிற்கின்றன. இவ்வாறானதொரு நிலையில் இந்த 'மதப்பதற்றம்' போக்கப்படவேண்டும் என்றவாறாக சஜித் தெரிவித்துள்ள கருத்தானது மாற்று நிலைப்பாடின்றி வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால், சஜித் சொல்வதுபோன்று இதன் பின்னணி உண்மையில் மர்மம் தானா? இந்தப் போராட்டங்களின் பின்னணி என்ன என்று அறியாதவராகத்தான் சஜித் உள்ளாரா? என்ற கேள்விகளை அவரிடம் நேர்படக் கேட்க வேண்டியிருக்கின்றது.


நீதி நிலைநாட்டப்படுவதற்கு எதிராகக் கள்ளமௌனம் காப்பதுகூட அநீதியே என்பார்கள். அவ்வாறானதொரு 'இழிநிலை' அரசியல்தான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தினுடையது. தமிழர் தாயகத்தில் இயல்பாகவே முன்னெடுக்கப்பட்டுவந்த 'சிங்கள – பௌத்த பேரினவாதத் திணிப்பு' கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் பல மடங்கு வேகம்பெற்றிருந்தது. அது இப்போதும் முழுப்பலத்துடன் தமிழர்களின் தொன்மங்களை, பண்பாடுகளை, கலைகளை, கலாசாரங்களை, நிலங்களை, விழுமியங்களை மற்றும் இன்னோரன்ன அம்சங்களை இரையாக்கிக் கொண்டிருக்கின்றது. இத்தனைக்கும் 'பொறுப்புள்ள' எதிர்க்கட்சித் தலைவராக சஜித் ஆற்றிய துலங்கல் என்ன? வலிதான கண்டன அறிக்கையை அவரால் பதிவுசெய்ய முடிந்ததா? பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக தன் இயலுமைக்கு ஏற்ற செயற்பாட்டு அரசியலை சஜித் மேற்கொண்டாரா? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் தேடப்படும் பட்சத்தில் சஜித்தின் அரசியல் அப்பட்டமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பெயரிடப்பட்டிருந்தபோது அவர் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில், 'வடக்கு – கிழக்கில் ஆயிரம் விகாரைகள்' திட்டமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனின், இந்த விகாரைகள் எங்கு அமைக்கப்படும்? அந்த விகாரைகள் தமிழர்களின் நிலங்களை விழுங்குகின்ற வகையில் அமைக்கப்படாது என்பதற்கும், தமிழர்களின் தொன்மங்களை இருட்டடிப்புச் செய்யாது என்பதற்கும் என்ன சான்று இருந்துவிடப்போகின்றது? 'சிங்கள – பௌத்த பேரினவாதம்' என்ற சித்தாந்தத்துக்கு அப்பாற்பட்ட சிந்தனை மட்டங்களைக் கொண்டவர்களாகத் தெற்குத் தலைவர்கள் எவருமில்லை. சஜித்தும் இதற்கு விதிவிலக்கல்லர்.

வடக்கு – கிழக்கில் இடம்பெறும் மதப்பதற்றம் போக்கப்படவேண்டும் என்று சஜித் வலியுறுத்துவது ஆத்மார்த்தமான கருத்து என்றால், இதற்காக ஒரு வலுவான எதிர்க்கட்சித் தலைவராக அவர் எத்தனையோ நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். போராட்டங்கள் இடம்பெறும் பகுதிகளுக்கு நேரில் சென்று அங்கு போராடும் தமிழர்களுடன் இணைந்து சஜித்தும் போராடலாம்; கலந்துரையாடலாம். 'சிங்கள – பௌத்தம்' என்றால் என்ன? 'சிங்கள – பௌத்த பேரினவாதம்' என்றால் என்ன என்பது தொடர்பான தெளிவூட்டல்களை அவர் தெற்கில் மேற்கொள்ளலாம், வலுவான போராட்டங்களையும் விழிப்புணர்வுகளையும் கொழும்பில் முன்னெடுக்கலாம், நாடாளுமன்றில் பெரமுனவின் மத ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்கலாம். ஆனால், இவற்றில் எதையும் சஜித் இதுவரை செய்யவில்லை. இனியும் செய்யப்போவதுமில்லை. காரணம் இந்த ஆட்சியாளர்கள் கட்சிக் கொடிகளின் கீழ் பிளவுபட்டுள்ளனரே அன்றி 'சிங்கள – பௌத்த பேரினவாதம்' என்பதன்கீழ் ஒன்றுபட்டவர்களாகவே தம் அரசியல் நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றனர். அவ்வளவே!

நாளொரு நல்வார்த்தை

"நல்லது, கெட்டது என்று இந்த உலகத்தில் எதுவும் இல்லை நாம் நினைப்பதுதான் அதை அவ்வண்ணம் மாற்றுகிறது" – ஷேக்ஸ்பியர்




# கொள்ளையடிப்பதற்காக உருவாகியது பெரமுன!

## அதன் முன்னாள் உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

**கொழும்பு, மே 9**

**பெரமுன என்பது ஒரு கட்சியல்ல. அது குடும்பம். குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. இனி அதை யாராலும் கட்டியெழுப்ப முடியாது இவ்வாறு பெரமுனவிலிருந்து பிரிந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மொட்டுக் கட்சிக்கு இனி யார் தலைவராக வந்தாலும் அந்தக் கட்சியை இனிக் கட்டி எழுப்பமுடியாது. அது கட்சியல்ல ஒரு குடும்பம். ராஜபக்சவின் குடும்பம். அந்தக் குடும்பத்தின் இருப்புக்காக அடுத்த அரசியல்வாதிகளை அழித்து பொருளாதாரத்தை நாசமாக்கி மக்களின் எதிர்பார்ப்புக்களை முடிவுக்குக் கொண்டு வந்தனர். குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி இது. யாருக்குத் தலைவர் பதவி கொடுத்தாலும், யாருக்கு அமைச்சுப் பதவிகள் கொடுத்தாலும் இந்தக் கட்சியை இனிக் கட்டியெழுப்பமுடியாது என்பதை ஜனாதிபதியும் பெரமுனவினரும் புரிந்துகொள்ள வேண்டும்" - என்றார். (ம-22)

# ஜே.வி.பி.யின் போராட்டத்தை இலக்கு வைக்கின்றது அரசு!

## தெற்கு ஊடகம் தகவல்

கொழும்பு, மே 9
கொழும்பு காலிமுகத்திடலில் எந்தவோர் அரசியல் கூட்டமும் இசை நிகழ்ச்சியும் நடத்த முடியாது என்று ரணில் அரசு தீர்மானம் எடுத்தமைக்கு உண்மையான காரணம் ஜே.வி.பிக்கு ஆப்புவைக்கவே என்று தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மே தினக் கூட்டத்தைக் காலிமுகத்திட்லில் நடத்துவதற்குத்தான் ஜே.வி.பி. திட்டமிட்டிருந்தது. அதற்காக ஏப்ரல் மாத ஆரம்பத்திலேயே ஜே.வி.பி. அனுமதியும் கோரி இருந்தது. ஜே.வி.பி.யினர் காலிமுகத்திடல் முழுவதையும் நிரப்பும் வகையில் மக்களை அழைத்து வருவதற்குத் திட்டமிட்டிருந்தனர்.
அவ்வாறு அழைத்து வந்தால் ஜே.வி.பி.யின் மக்கள் பலம் என்னவென்று நாட்டுக்குத் தெரிந்துவிடும். ஏற்கனவே ஜே.வி.பி. சில இடங்களில் முதலாமிடத்திலும், சில இடங்களில் இரண்டாமிடத்திலும் இருக்கின்றது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இந்தநிலையில் காலிமுகத்திடலை அவர்கள் முற்றாக நிரப்பினால் அவர்களின் பலம் வெளியே தெரிந்துவிடும் என்று அஞ்சித்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்படி முடிவை எடுத்தார். இதனால் ஜே.வி.பி.யினர் மே தினக் கூட்டத்தை கொழும்பு நகர மண்டப வளாகத்தில் நடத்தினர் - என்றுள்ளது. (ம-22)

நாளை
10.05.2023
புதன்கிழமை
சித்திரை 27

சுபநேரம் : 04.24 – 05.54
ராகுகாலம் : 11.54 – 01.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- **முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2021 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)**
- **முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2021 (புதிய பாடத்திட்டம்)**

மேற்படி பரீட்சைகளினை 13.05.2023 (சனிக்கிழமை) தொடக்கம் 28.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 09.05.2023 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 12.05.2023 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.**
**08.05.2023**

(CR/39804)AH-1

## ஈர விழிகளுடன் ஈராண்டு இதயஅஞ்சலி
## திருமதி தையல்நாயகி கந்தையா



சந்திரன் இல்லா வானம்
தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லா வேந்தன் மதகரி இல்லாச் சேனை
சுந்தரப் புலவர் இல்லா தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திகள் இல்லா வீணை
தனம் இலா மங்கை போல இந்திரகிரியும் இன்று
உங்களை இழந்ததாலே இன்னலுக்காளானதே
இனியென்ன செய்வோம் நாமே

ஆலிலே பூவும் காயும் அளி தரு பழமும் உண்டேல்
சாலவே பட்சி எல்லாம் தன் குடி என்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பர்
கோடா கோடி ஆலிலை ஆதி போனால் அங்கு
வந்திருப்பர் உண்டோ

**“சந்ததமும் உம் நினைவு சாகாத நம் நினைவே”**

ஆத்ம ஜோதியாக அருளியல் உலகில் வாழும்
நீங்கள் என்றும் எமை வழிநடத்த அன்பெனும்
மலர்கள் தூவி அஞ்சலி செய்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

அன்னை மடியில்
27.02.1940

ஆண்டவன் அடியில்
09.05.2021

“இந்திரகிரி”, வதிரி, கரவெட்டி.

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர்.

(CR/39801)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 - 10 - 1942



மறைவு
08 - 05 - 2023

### விமலதேவி முத்தையா (ராசாத்தி அக்கா)

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விமலதேவி முத்தையா (ராசாத்தி அக்கா) நேற்று (08.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் முத்தையா - நாகரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், முத்துக்குமாரசுவாமி, சுப்பிரமணியம், சந்திரசேகரன், திருமதி சரஸ்வதி நவரத்தினராஜா, திருமதி லீலா சுந்தரலிங்கம் மாசிலாமணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2023) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

“விமல வாசம்”
பிள்ளையார் கோவிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

(CS/50347)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

மு.மாசிலாமணி - 075 039 2790, T. முரளி - 077 844 9752

## மரண அறிவித்தல்

## திருமதி ஜேக்கப் சூசானாலில்லி



பிறப்பு: 31.12.1939 இறப்பு : 08.05.2023

உரும்பிராயை பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜேக்கப் சூசானாலில்லி அவர்கள் நேற்று (08.05.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் ஜேக்கப் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோசேப் அமலோற்பவம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிலோமினா மற்றும் ஞானரட்ணம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மேரி யோசேப் மற்றும் மேரி மெற்றலின் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மேரி சுசீலா (கொலண்ட்), அன்ரன் மகேஸ் (பிரான்ஸ்), றெஜின் வசந்தி (ஆசிரியர், உரும்பிராய்), சகாயினி (பிரான்ஸ்), றோஸ் மாலா (லண்டன்), கிறிஸ்ரின் லதா (கொலண்ட்), லூசியா பாமா (கொழும்பு), இராஜசேகரன் (லண்டன்), போல் றஜீந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யேசுதாசன், லேயா, பிரான்சிஸ் சேவியர், ஜெயராட், ஜோன் ஸ்ரீபன், செல்வச்சந்திரன், குணசீலன், கௌசல்யா, ஜின்ஸ்ரினா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், யுடெக்சியா, அனோஜன், லினோ, ஜோகுளோடியா, டிரோசன், அனுசன், நிரோசன், மெலனி, புளோறி, நன்ஸி, சரோன், ஸ்ரெவ்னா, அமிலியா, ஸ்கைலி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அருட்தந்தை கியுபேட் (அமதி) அவர்களின் பெரியம்மாவும், நிஷாந்தன் (சுவிஸ்) அவர்களின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (10.05.2023) புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
077 2640 624

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24604)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதானியப் பயிர்கள் அழிவடையும் நிலை!

## வரும் மாதங்களில் விலை அதிகரிக்கலாம்

**சாவகச்சேரி, மே 9**

**அண்மைய நாள்களாகப் பெய்துவரும் மழையால் வடமாகாணத்தில் பரவலாகப் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் இம்முறை காலபோக நெற்செய்கை அறுவடையின் பின்னர் சிறுதானியப் பயிர்கள் பயிரிடப்பட்டன. பயிர்கள் வளர்ந்து பூக்கும் பருவத்தில் தொடர்ச்சியாக மழைபெய்து வருவதால் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடையும் நிலையில் உள்ளன.

அத்துடன் மழையின் தாக்கத்தால் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையும் பாதிப்படைந்துள்ளது. இதனால் மரக்கறி வகைகளின் விலைகளும் வரும் காலங்களில் அதிகரிக்கலாம் என்றனர். (ம-14,9)

## குழந்தைகளின் போஷாக்கை அதிகரிப்பதற்கு விசேடதிட்டம்

கொழும்பு, மே 9



சிறு குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; குழந்தைகளுக்கு போஷாக்கை அதிகரிக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு உயர் போஷாக்குடன் கூடிய பிஸ்கட் வகைகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்பள்ளிக் குழந்தைகளுக்கு உயர் ஊட்டச்சத்து பிஸ்கட் வழங்கும் திட்டமொன்றை புதிதாக ஆரம்பித்துள்ளோம். அதற்கான அனைத்தையும் தயார் செய்து அடுத்த மாதத்துக்குள் விநியோகம் செய்வோம். மேலும், குழந்தைகளுக்கு முட்டை போன்ற சத்தான உணவுகளை குறைந்த விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த வேலைத்திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (ம-14,இ)

## கால்நடைகள் திருட்டு: நபர்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மே 9

மாடுகள் திருடிய குற்றச்சாட்டில் கைதான மூன்று நபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாடுகளைத் திருடிச் செல்ல முற்பட்ட மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மாடுகளை நீண்டகாலமாகத் திருடிச் சென்றமை பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது. அதனையடுத்து அவர்களை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது, சந்தேகநபர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-14,23)



## கண்டாவளைப் பாலம்; புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, மே 9

கண்டாவளைப் பிரதேசசெயலகத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பாலத்தைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாலத்தின் புனரமைப்பு கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன.

பாலத்தின் புனரமைப்புக்காக அருகில் தற்காலிக பாதை ஒன்று அமைக்கப்பட்டு மக்கள் போக்குவரத்தை மேற்கொண்டனர். தற்போது நிலவும் மழையுடனான காலநிலையால் அந்தப் பாதை குண்டும் குழியுமாக மாறி மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பாலத்தை புனரமைத்து மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாலத்தின் தற்போதைய நிலை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். (ம-14,113)



## 20 வருடங்களாக மூடப்பட்டுள்ள அனலைதீவு கூ.சங்கக் கட்டடம்!

யாழ்ப்பாணம், மே 9

அனலைதீவுப் பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடம் கடந்த 20 வருடங்களாகப் பயன்பாடின்றி மூடப்பட்டுள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அனலைதீவுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள சந்தியில் அக் காலப்பகுதியில் வசித்த மக்களின் பரம்பலுக்கேற்ப கிளைக் கட்டடம் அமைக்கப்பட்டது.

எனினும் அங்கிருந்து பலர் புலம்பெயர்ந்து சனத்தொகை குறைவடைந்த நிலையில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாகக் கிளைக்கட்டடம் மூடப்பட்டுக் காணப்படுகின்றது.

அத்துடன் தற்போது வசிக்கும் சனத்தொகைக்கேற்ப அந்தக் கிளை தலைமை அலுவலகத்துடன் இணைந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றது எனவும் மக்கள் தெரிவித்தனர். (ம-14,9)

## பங்களாதேஷ் ஒப்பந்தம்: 29இல் முதற்கட்டப் பேச்சு

கொழும்பு, மே 9

பங்களாதேஸுடனான இரு தரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முதற்கட்டப் பேச்சு, எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று ஜனாதிபதி செயலகத்தின் சர்வதேச வர்த்தக அலுவலகப் பேச்சாளர் கே.ஜே. வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மெய்நிகர் மூலம் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், ஒப்பந்தம் குறித்த யோசனைகள் மற்றும் அதனை எட்டுவதற்கான இறுதித் திகதி உள்ளிட்ட பல்வேறு முக்கிய தீர்மானங்கள் [illegible] பங்க[illegible] படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக, இரு நாடுகளின் வர்த்தகம் 25 சதவீதத்தால் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, முன்மொழியப்பட்ட சீனா-இலங்கை வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை என்பனவற்றுக்காக இந்திய மற்றும் சீன அதிகாரிகளின் பதிலை இலங்கை எதிர்பார்த்துள்ளது. மேலும் உத்தேச வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக, தனியார் துறை பங்குதாரர்களுடன் கலந்து [illegible] முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார். (ம-14,இ)

## வாகனங்களுக்கு கறுப்புப்பட்டியல்

கொழும்பு, மே 9

ஐந்து வருடங்களாக வாகன வரி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதனை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த, விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தில் தற்போது 8.3 மில்லியன் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், 6 மில்லியன் வாகனங்கள் மட்டுமே கியூ.ஆர். குறியீட்டு முறைமை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன்படி 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வாகன வரி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள் மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரின் உதவியுடன் தகவல் அமைப்பில் இருந்து நீக்கப்படும் - என்றுள்ளது. (ம-14,இ)



## வறுத்தலைவிளானில் எறிகணை மீட்பு!

யாழ்ப்பாணம், மே 9

காங்கேசன்துறை, வறுத்தலைவிளான் பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றில் எறிகணைக் குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணி உரிமையாளர் காணியில் துப்பரவுப் பணியில் ஈடுபட்ட வேளை, எறிகணை குண்டு காணப்படுவதை அவதானித்தார். அதன்பின்னர் இது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். அதனையடுத்து விரைந்த காங்கேசன்துறைப் பொலிஸார் எறிகணையை இனங்கண்டதுடன், அதனை செயலிழக்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-14,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிளாஸ்ரிக் போத்தல் விற்பனைக்கு

எம்மிடம் 1000ml, 750ml, 500ml, 325ml, 200ml, 100ml, 50ml, 28ml புதிய பிளாஸ்ரிக் போத்தல்கள் விற்பனைக்கு உண்டு. (மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்)

குறிப்பு:- நல்லெண்ணெய், நெல்லிக் கிரஷ், பனங்களி உற்பத்தியாளருக்கு ஏற்ற பிளாஸ்ரிக் போத்தல்களும் எம்மிடம் உண்டு.

தொடர்பு:- சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)

(CR 39802)(A1-1)



## அறை வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட கட்டடத்தில் இணைந்த குளியலறை, சமையல் வசதியுடன் தளபாடமிடப்பட்ட அறை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 953 0496

(CS 24819)A-1


# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

## வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்

## 2023.07.01 தொடக்கம் 2024.06.30 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2023 - 2024 / 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) | 20,000.00 |
| 02. | D/JF/2023 -2024 /02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 130,000.00 |
| 03. | D/JF/2023- 2024/03 | | பிரதேச வைத்தியசாலை. வல்வெட்டித்துறை | 30,000.00 |
| 04. | D/JF/2023- 2024/04 | | ஆதாரவ வத்தியசாலை. சாவகச்சேரி | 130,000.00 |
| 05 | D/JF/2023 -2024/05 | | பிரதேச வைத்தியசாலை. சங்கானை | 22,000.00 |
| 06 | D/JF/2023 - 2024/06 | | ஆதார வைத்தியசாலை. ஊர்காவற்துறை | 75,000.00 |
| 07 | D/JF/2023-2024/07 | | பிரதேச வைத்தியசாலை. நெடுந்தீவு | 10,000.00 |
| 07 | D/JF/2023 - 2024/08 | | பிரதேச வைத்தியசாலை. அச்சுவேலி | 17,000.00 |
| 08 | D/JF/2023 -2024/09 | | பிரதேச வைத்தியசாலை. கோப்பாய் | 30,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு. வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    இ. அத்துடன். வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 021 222 3725, 021 222 6253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்கமுடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 10.05.2023 ஆம் திகதி முதல் 23.05.2023 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா3.000.00 இனை அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 24.05.2023 அன்று காலை10.30 மணிக்கு முன்பதாக **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலை மனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 19.05.2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும் . என்பதுடன் இப் பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப் பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்தியபெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971 மின்னஞ்சல்:** rdhsjaffna 15@gmail .com

(CR 39803)(k-1)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

சாவகச்சேரி, மே 9

எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணி இன்று செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மிருசுவில் தெற்கிலும் நாளை புதன்கிழமை மிருசுவில் வடக்கிலும், நாளைமறுதினம் வியாழக்கிழமை எழுதுமட்டுவாழ் வடக்கிலும், 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை எழுதுமட்டுவாழ் தெற்கிலும், 13ஆம் திகதி சனிக்கிழமை கரம்பகத்திலும், 15ஆம் திகதி திங்கட்கிழமை விடத்தற்பளையிலும், 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கெற்பேலியிலும், 17ஆம் திகதி புதன்கிழமை கொடிகாமம் தெற்கிலும், 18ஆம் திகதி வியாழக்கிழமை உசனிலும் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களது வீடுகளில் வளர்க்கப்படுகின்ற அனைத்து நாய்களுக்கும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது அவசியமாகும். மேலும் இந்த தடுப்பூசி முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஓ-14,159)

# எழுத்தாளர் பெர்லிபினை இலக்குவைத்து தாக்குதல்

ரஷ்ய ஆதரவு எழுத்தாளர் பெர்லிபினை இலக்குவைத்து கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் அவர் படுகாயமடைந்துள்ள நிலையில், அமெரிக்காவும் உக்ரைனும் இணைந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு நியாயமானது என்று தெரிவித்து பெர்லிபின் தொடர்ந்து பல்வேறுபட்ட பத்திகளையும் கட்டுரைகளையும் எழுதிவந்தார். அவருக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுமிருந்தது. இந்தப் பின்னணியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)


## வேலையாள் தேவை

**யாழ். நகரில் இயங்கும்**
**பிரபல நிறுவனமொன்றிற்கு**
**பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு**
**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

- **கணக்காளர்** - (கணினி அறிவுடையவராக இருத்தல்)
- **கணக்குப் பதிவாளர்** - (கணினி அறிவுள்ளவர்)
- **சாரதிகள்** - (A.D) (45 வயதிற்குமேற்பட்டோர்)
- **விநியோக உதவியாளர்கள்**

(EPF, ETF மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படும்)

**அனுப்ப வேண்டிய முகவரி:**
விளம்பர இல. JF 1044
C/O உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cs.24813) (N.1)


## ஈர விழிகளுடன் ஒன்பது ஆண்டு

### கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்

திதி : சித்திரை மாத சங்கடஹர சதுர்த்தி
(09.05.2023)



தோற்றம் 13.10.1924 — மறைவு 19.04.2014

அன்புத் தெய்வமே
ஆண்டுகள் ஒன்பது
போனது அம்மா!
எங்களுடன் வாழ்ந்த
அழகிய நினைவுகளும்
தங்கள் அன்பும் - எம்மை
வழி நடத்திச் செல்லும்
தங்களை நேரில்
காண இயலாது இருப்பினும்
நீங்கள் எப்போதும்
எம்முடனே வாழ்கிறீர்கள்...

இல.140, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
மகன் குடும்பத்தினர்.

(CS 24818) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுன அரசாங்கம் விரைவில் கவிழும்!

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, மே 9

**பெரமுன அரசாங்கம் விரைவில் கவிழும். இருக்கின்ற அரசே கவிழும் நிலையில் உள்ளபோது, தேசிய அரசு எப்படிச் சாத்தியப்படும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார.**

தேசிய அரசு உருவாக்கப்பட்டால் அதில் ஐக்கிய மக்கள் சக்தி இணையுமா? என்று அவரிடம் கேட்டபோதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'அரசு ஏனைய கட்சிகளில் உள்ள எம்.பி.க்களுக்கு வலை வீசி வருகின்றது. அரசுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தால் பெரமுனவின் முழுமையான ஆதரவு இருந்தால் எதற்காக அடுத்த கட்சிகளின் எம்.பி.க்களுக்கு வலைவீச வேண்டும்? மக்கள் கஷ்டத்தில் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் கோடிக்கணக்கான பணம் கொடுத்து எம்.பி.க்களை வாங்குவதற்கான தேவை ஜனாதிபதிக்கு ஏன் எழுந்துள்ளது? அரசுக்குள் சிக்கல் எழுந்துள்ளது. அது ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது.

இருக்கின்ற அரசே உடையும் நிலையில் இருக்கும்போது தேசிய அரசு எப்படிச் சாத்தியப்படும்? தேசிய அரசு உருவானாலும் உருவாகாவிட்டாலும் நாம் அதில் இணையமாட்டோம். தேர்தலில் வெற்றிபெற்று முழுமையான மக்கள் ஆணை ஒன்றைப் பெற்ற சக்தி வாய்ந்த அரசை நாம் அமைப்போம்' - என்றார். (ம-22)

# கர்ப்பப்பை புற்றுநோய் விழிப்புணர்வு: மைத்திரி விக்கிரமசிங்க முன்னெடுப்பு

கொழும்பு, மே 9

ஜனாதிபதியின் பாரியாரான மைத்திரி விக்கிரமசிங்க, கர்ப்பப்பை புற்றுநோய் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பால், 'அணிசேரா நாடுகளிலிருந்து கர்ப்பப்பை புற்றுநோயை அகற்றுதல்' என்ற தொனிப்பொருளில் கர்ப்பப்பை புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விழிப்புணர்வு நடவடிக்கையிலேயே அவர் தன்னை ஈடுபடுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரித்தானிய மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவுக்கு ஜனாதிபதியுடன் சென்றவேளையில் அங்கு இடம்பெற்ற துணைவியர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் அணிசேரா நாடுகளின் செயலகத்தில் அதன் தற்போதைய தலைவியான ருவாண்டாவின் முதல் பெண்மணி ஜெனற் கனகம்மே, பஹாமஸ், காம்பியா, கானா, சாம்பியா போன்ற ஆபிரிக்க நாடுகளின் முதல் பெண்மணிகளுடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை மைத்திரி விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார்.

தனது நாட்டில் எவ்வகையான விழிப்புணர்வு நடவடிக்கைகளை தான் முன்னெடுத்து வருவதாக முதலாவது அமர்வில் மைத்திரி விக்கிரமசிங்க விளங்கப்படுத்தினார்.

தொடர்ந்து 2030ஆம் ஆண்டு கர்ப்பப்பை புற்றுநோயை அணிசேரா நாடுகளிலிருந்து ஒழிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், ஆய்வுகள் பற்றி விளக்கமளித்தார். அணிசேரா நாடுகளில் நடுத்தர குடும்பப் பெண்களையே கூடுதலாக கர்ப்பப்பை புற்றுநோய் தாக்குகிறது.

இதேநிலை நீடித்தால் 2030ஆம் ஆண்டு அணிசேரா நாடுகளில் கர்ப்பப்பை புற்றுநோய் காரணமாக மூன்று நிமிடத்துக்கு ஒரு பெண் இறக்கும் சாத்தியம் காணப்படும் என்றும் மைத்திரி விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். (ம)

# எரிபொருள் விநியோகம்: கட்டுமானங்கள் தீவிரம்!

## பார்க் ஷெல் நிறுவனம் முன்னெடுப்பு

கொழும்பு, மே 9

கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை எரிபொருள் குதத்துக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கான குழாய்கள் பொருத்தும் பணியில் அமரிக்க எரிபொருள் விற்பனை நிறுவனமான ஆர்.எம்.பார்க் ஷெல் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த குழாயில் பல இடங்களில் கசிவுகள் காணப்பட்ட நிலையில் புதிய குழாய்கள் பொருத்தப்படுகின்றன. இதர கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜூன் மாதம் முதல் இந்த நிறுவனம் எரிபொருள் விற்பனையை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மத்திய வங்கியின் திருத்தச்சட்ட வரைவை நிறைவேற்றப் பொதுவாக்கெடுப்பு அவசியம்

கொழும்பு, மே 9

மத்திய வங்கி திருத்தச்சட்ட வரைவை நிறைவேற்றுவதற்குப் பொது வாக்கெடுப்புத் தேவை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டவரைவில் காணப்படும் சில அம்சங்கள் அரசமைப்புக்கு முரணானவை எனவும் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தச் சட்டவரைவில் மத்திய வங்கிக்குரிய நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் குறைவாகவே காணப்படுகிறது. ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் உள்ள பொறுப்புக்கூறல் தொடர்பாகத் தெளிவான விளக்கம் இல்லை.

மத்திய வங்கியின் பொறுப்புக்கூறும் தன்மையை புதிய சட்ட வரைவு கட்டுப்படுத்துகிறது. பிரதி ஆளுநரை நியமிப்பது தொடர்பில் தெளிவான விளக்கம் இல்லை. மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரம் உள்ளது ஆனால் மத்திய வங்கிக்கு தீர்ப்பு வழங்கும் அதிகாரம் இல்லை. அது நீதிமன்றத்தின் வேலை.

இப்படி பல அரசமைப்புக்கு முரணான விடயங்கள் காணப்படுவதால் இந்தத் திருத்தவரைவை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையுடன் பொதுவாக்கெடுப்பும் அவசியம் என உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் திருத்தச்சட்டம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாளைமறுதினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே 9

மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக பிரிட்டன் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 4ஆம் திகதி பிரிட்டன் சென்றிருந்தார். அங்கு அவர் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிலும் கலந்து கொண்டார். (எ-இ)

# மத்திய வங்கி தொடர்பான சட்டவரைவு பயங்கரமானது

## கெவிந்து குமாரதுங்க எம்.பி. தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் அமைப்பு மத்திய வங்கிக்கு மேற்கொண்ட தாக்குதலைவிட தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள புதிய சட்டவரைவு பயங்கரமானது என்று சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மத்திய வங்கி தொடர்பான புதிய சட்டவரைவு, விடுதலைப்புலிகள் அமைப்பு மத்திய வங்கியின் மீது மேற்கொண்ட தாக்குதலை விடப் பயங்கரமானது. மத்திய வங்கியை சுயாதீனப்படுத்துவதற்காக இந்தச் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தச் சட்டவரைவில் மத்திய வங்கியின் ஆளுநர், நிதிச் சபை உறுப்பினர்கள் உட்பட மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர் நிதியமைச்சரின் பரிந்துரையின் ஊடாகவே ஜனாதிபதி நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சராகவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியின் ஆளுநர், நிதிச் சபையின் உறுப்பினர்களை எவ்வாறு நியமிக்கலாம். இதில் எவ்வாறு சுயாதீனத்தன்மை பேணப்படும். மத்திய வங்கியால் அரசியல் தலையீடு இல்லாமல் எவ்வாறு செயற்படமுடியும்.

இந்தச் சட்டவரைவில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றக் குழு நிலை விவாதத்தின்போது சட்டவரைவு திருத்தம் செய்யப்படுமா? என்பதில் அவதானமாக உள்ளோம் - என்றார். (ம-14-இ)

# ஐ.ம.ச. தலைமையில் புதிய அரசியல் கூட்டு

## சஜித் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் வெகுவிரைவில் புதியதொரு அரசியல் கூட்டணி உதயமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டு மக்கள் மாற்றத்தையே எதிர்பார்க்கின்றனர். ரணில் ராஜபக்ச ஆட்சிக்குப் பதிலாக ஊழல், மோசடியற்ற ஆட்சியையே கோருகின்றனர்.

மாற்றுத் தேர்வு பற்றி ஆராய்கையில் ஐக்கிய மக்கள் சக்தியே முதன்மைத் தேர்வாக உள்ளது. எமது கட்சியால் மட்டுமே ஊழல், மோசடியற்ற நல்லாட்சியை வழங்கக்கூடியதாக இருக்கும்.

அந்தவகையில் புதியதொரு அரசியல் கூட்டணி வெகுவிரைவில் உதயமாகும். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.' - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசப் பங்கேற்புடன் அரசுடன் பேச்சுக்கள்

## முன்நிபந்தனை விதிக்கவேண்டும் என்கிறது ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

நிரந்தரத் தீர்வுக்கான பேச்சு கால அட்டவணையின்கீழ் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நடுநிலை அவதானத்துடன் மேற்கொள்ளப்படவேண்டும் - இவ்வாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அழைப்பாளர் தென்கயிலை ஆதீனத்தின் தவத்திரு அகத்தியர் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியுடனான தமிழ்க் கட்சிகளின் பேச்சு தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் தொல்லியல் திணைக்கள அடாவடிகளும் கோவில்கள் அழிப்பும், அத்துமீறிய விகாரைகள் அமைப்பும், பௌத்த மயமாக்கலும் அசுர வேகத்தில் அரச இயந்திரத்தால் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அரசின் பேச்சுக்கான அழைப்பை நாம் மிகக் கவனமாகக் கையாளவேண்டும்.

ஒவ்வொருமுறையும் பேச்சுக்கு அழைத்து பசப்பு வார்த்தைகளைக் கூறுகின்றார்களே அன்றி உருப்படியான நடைமுறை ரீதியிலான நீண்டகாலத் தீர்வுகள் எதனையும் வழங்குவதாகவோ செயலில் உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதாகவோ இல்லை. மாறாக படிப்படியாக எமது தனித்துவம், நிலங்கள் என்பன திட்டமிட்டு பொதுமைப்படுத்தப்பட்டு வருவதுடன் இவ்வாறான பேச்சுக்கள் மூலம் அன்று வரையான மாற்றங்கள் அங்கீகரிக்கப்பட்டனவாக மாற்றம் பெறுவதுடன் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதன் மூலம் அவை மறக்கடிப்படுகின்றன அல்லது மழுங்கடிக்கப்படுகின்றன.

ஜனாதிபதி பதவி ஏற்று ஒரு வருடம் ஆகின்ற நிலையில் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்வுப் பொதி வெளியிடுகின்றேன், சில ஆக்கபூர்வமான விடயங்களை நடைமுறைப்படுத்துகின்றேன்- என்றார். நடந்ததோ வேறு. தமிழர் தாயகத்தில் மேலாதிக்க ஆக்கிரமிப்பு மனநிலையுடன் மிக மோசமாக பௌத்தமயமாக்கல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு தொல்லியல் திணைக்கள அடாவடி செயற்பாடுகள் மற்றும் பௌத்தமயமாக்கல் முற்றாக நிறுத்தப்படல், தமிழர்களின் ஆதி தமிழர் வழிபாட்டிடங்களுக்கு எந்தவித இடையூறுமின்றி வழிபடும் உரிமையை வேற்று மதப் பிரசன்னங்கள் இன்றி அங்கீகரித்தல், வடக்கு - கிழக்கில் காணி விடுவிப்பு மற்றும் முழுமையான மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை போன்ற சமகால விடயங்களில் உடனடித் தீர்வை முன்நிபந்தனையாக இம்மாதத்துக்குள் நிறைவேற்றக் கோரவேண்டும்.

நிரந்தரத் தீர்வுக்கான பேச்சு கால அட்டவணையின் கீழ் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நடுநிலை அவதானத்துடன் மேற்கொள்ளப்படவேண்டும். கடந்த காலத்தில் இந்த விடயங்களில் தலையிட்ட நாடுகளை, வாக்குறுதி தந்த நாடுகளை, ஐ.நா. சபையை எமது தீர்வு மற்றும் புதிய ஆக்கிரமிப்புக்கள் திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுக்க, அரசு மீது பொருளாதார நெருக்கடியான இந்தத்தருணத்தில் மேலும் அழுத்தம் தரக் கோரவேண்டும்.

முக்கியமான தீர்க்கமான காலகட்டத்தில் வலிகள் சுமந்த தியாகங்களால் சிவந்த தமிழர் வாழ்வில் கண்ணீரின் உச்சந் தொட்ட இந்த மாதத்தில் அனைவரும் ஒன்றுபட்டு இந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் இல்லாவிடின் ஒத்துழையாமை இயக்கத்தை அரசின் சகல திட்டங்களுக்கும் எதிராக முன்னெடுக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் கோரி நிற்கின்றோம்-என்றுள்ளது. (அ-ஒ,7,66,125)

தமிழீழக் கோரிக்கையை இல்லாமலாக்கவே

# பௌத்த - சிங்கள மயமாக்கல்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் காட்டம்

யாழ்ப்பாணம், மே 9

மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சி முன்வைக்கப்படாமலிருக்க வடக்கின் மக்கள் தொகையில் 25 சதவீதம் சிங்களவர்களாக இருக்கவேண்டும் என அரச மற்றும் இராணுவ உயர்மட்டங்கள் முடிவெடுத்து அதற்காக சிங்கள - பௌத்த மயமாக்கலை நடைமுறைப்படுத்துகின்றன - இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

வடக்கு - கிழக்கைக் குறிவைத்து புராதன சைவ ஆலயங்களை உடைத்தும், நீதிமன்ற உத்தரவுகளை மீறியும் தான்தோன்றித்தனமாகவும் தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்தும் அவற்றில் விகாரைகளைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்துஇராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்களக் குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

போருக்குப் பின்னர் அம்பாந்தோட்டை உட்பட தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள். கிழக்கில் ஏற்கனவே மிகப் பெரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய சிங்களப் பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது வடக்கு மாகாணத்தில் அவை முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கையும் ஒரு கலவரப் பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசாங்கங்களின் நோக்கமாக இருக்கின்றது. இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டதுமான எமது தாயகபூமியான வடக்கு - கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப்பட்டால் எங்கே செல்வது?

மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்கவேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்தவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ,இ)

# முருகன் சிலையுடன் மூவர் கைதாகினர்

மன்னார், மே 9

தொல்பொருள் எனச் சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்றுடன் மூவர் மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார், எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களும் ஆண் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொல்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய அளவிலான முருகன் சிலையை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ,இ)

### மாணவர்களுக்கு...

மன்னார் நகரிலுள்ள பிரபல பாடசாலையில் கற்கும் மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரத்தியேக கல்வி நிலையத்துக்குச் சென்றுள்ளான். அப்போது வெள்ளை வானில் வந்த இனம் தெரியாதவர்கள் இனிப்புப் பண்டம் வழங்கி பலவந்தமாகக் கடத்த முற்பட்டபோது மாணவன் தப்பியோடியுள்ளான்.

இந்தச்சம்பவம் மன்னாரில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை காலையும் மன்னார் நகர் கன்னியர்மட வீதியால் பாடசாலைக்கு வந்துக்கொண்டிருந்த இன்னொரு மாணவனுக்கும் இனிப்புப் பண்டம் கொடுத்து பலவந்தமாகக் கடத்த முற்பட்டுள்ளனர். மாணவன் தப்பித்து ஓடியுள்ளான். இருப்பினும் வெள்ளைவானில் வந்தவர்கள் துரத்தியபோதும் சனநடமாட்டம் அதிகமாக இருந்ததால் அவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து அடுத்தடுத்த நாள்களில் இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் மன்னாரில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. (அ-ஒ,60)

### ஆளுநர்...

ஜனாதிபதிக்கு நம்பிக்கையானவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆளுநர் பதவிக்கு எனது பெயரும் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக அறிந்துகொண்டேன். ஜனாதிபதி அவருக்கு விருப்பமான, திறமையான, நம்பிக்கையான அதேநேரம் கட்சிக்கு சேவையாற்றிய மூத்த உறுப்பினர்களை அதற்காகப் பெயரிடுவார் என நம்புகிறோம். யார், யார் நியமிக்கப்படுவார்கள் என இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அதேநேரம் ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்கள், அவர்கள் அரசியல் செய்யும் மாகாணத்துக்கு நியமிக்கப்படமாட்டார்கள் - என்றார். (அ-ஒ,இ)

### இரண்டு...

யில், சம்பந்தன் தலைமையில் பங்கேற்கும் அந்தக் கட்சி இரு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாளைமறுதினம் 11ஆம் திகதி தொடக்கம் 3 நாள்கள் பேச்சு நடத்தவுள்ளார். அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாகச் செயற்படும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் இன்று பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சந்திப்புக்கான அழைப்பு ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெறாமையால் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று புளொட் மற்றும் ரெலோ என்பன அறிவித்துள்ளன.

இந்த நிலையில் இன்றைய சந்திப்பில் கலந்துகொள்ளும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதில் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவும் பங்கேற்றிருந்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்;

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்கபூர்வமாக நாம் அரசாங்கத்தோடு பேசி முடிவெடுக்கத் தயார்.

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை சர்வதேச ரீதியாகவும் நாட்டுக்குள்ளேயும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படைக்கு மாறாக எந்தப் பேச்சுக்களிலும் ஈடுபட நாம் தயாராக இல்லை.

இந்த அடிப்படையில்தான் இன்றைய சந்திப்பில் பங்குபற்றுவோம் - என்றுள்ளது. (அ-ஒ,5,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன். மாவட்டச்...

தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

மன்னார், வங்காலை சென். ஆன்ஸ் பாடசாலைக்கு மன்னார் மாவட்டச் செயலரின் கணவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஓய்வுபெறுவதற்கு இன்னமும் 5 மாதங்களே உள்ளன. இந்த நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அவருக்கு நியமனம் வழங்கியுள்ளது.

புதிதாக அதிபராக நியமிக்கப்படுபவர் தான் நியமிக்கப்படும் பாடசாலையில், மூன்று வருடங்கள் கட்டாயம் சேவை யாற்றவேண்டும் என்று நிபந்தனை களைப் போடும் வட மாகாண கல்வியமைச்சு, மன்னார் மாவட்டச் செயலரின் கணவருக்காக, நெறிமுறைகளை மாற்றியமைப்பது அநீதியான செயற்பாடாகும். மன்னார் மாவட்டச் செயலர் தனது பதவியை வைத்துச் செய்ய முயலும் சுயநலத்தேவைகளுக்கு வட மாகாணக் கல்வியமைச்சும் உடந்தையாக செயற்பட்டதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. குறித்த முறையற்ற அதிபர் நியமனம் நிறுத்தப்பட்டு பொருத்தமான முறையில் நியமனம் வழங்கப்படவேண்டும்.

இது சீர்செய்யப்படவில்லையாயின், பாடசாலைகளில் அதிபராக நியமிக்கப்படும் ஒருவர் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக அதே பாடசாலையில் கடமை யாற்றவேண்டும் என வட மாகாணக் கல்வியமைச்சு விதித்துவரும் நிபந்தனையை இலங்கை ஆசிரியர் சங்கத்தால் கேள்விக்குட்படுத்தப்படும் - என்றுள்ளது. (அ-ஒ.இ)

## ஆளுநர்...

ஒன்று ஆளுநர் அலுவலகத்தினுள்ளே நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தினுள் பொது நிகழ்வுகள் நடத்துவதற்கு இதுவரை காலமும் அனுமதிகள் வழங்கப்பட்டிருக்காத நிலையில் தற்போது திடீரென தனியார் நிறுவனமொன்று அனுமதிக்கப்பட்டமை தொடர்பில் பலரும் சந்தேகங்கள் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்னரான காலங்களில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றியிருந்தார். இந்த நிலையில், அவர் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கியமை எல்லை மீறிய அதிகாரத் துஷ்பிரயோகம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

'அகங்கனலி கூடம்' என்ற குறுந்திரைப்படப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வே கடந்த சனிக்கிழமை ஆளுநர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் கலாசார நிகழ்வு கடந்த மாதம் 15ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தால் தொல்லியல் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பழைய கச்சேரியில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக கடந்த 6ஆம் திகதியும் பரிசளிப்பு நிகழ்வு அதேயிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டபோதும் மழை காரணமாக ஆளுநரின் கேட்போர் கூடத்துக்கு திடீரென மாற்றப்பட்டது.

ஆளுநர் அலுவலகத்தினுள் வேறு அரச திணைக்களங்களினது நிகழ்வுகளுக்குக் கூட அனுமதி வழங்கப்படாத நிலைமையே இதுவரையும் உள்ளது. ஆனால், தனியார் நிறுவனம் ஒன்றின் பரிசளிப்புக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா அனுமதி வழங்கியமை பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை - மேற்படி தனியார் நிறுவனம், வடக்கு மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்வதற்கு கடந்த காலத்தில் விண்ணப்பித்திருந்தது. கூட்டுறவுச் சட்டவிதிகளுக்கு முரணாக அந்த நிறுவனத்துக்கு பதிவுக்கு அனுமதி வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அப்போதைய கூட்டுறவு ஆணையாளராக இருந்த மு.நந்த கோபாலனுக்கு கடுமையான அழுத்தம் கொடுத்திருந்தார். சட்டத்தை மீறிய செயலுக்கு மு.நந்தக்கோபாலன் இணங்கவில்லை என்பதால் அவரை பழிவாங்கும் வகையில் ஆளுநர் திடீர் இடமாற்றம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5)

## பதவி...

லிருந்து கிடைக்கப்பெறவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் சப்ரகமுவ ஆளுநர்களை பதவி விலகுமாறு ஜனாதிபதி செயலகத்தால் கோரப்பட்டதாகவும் அதற்கு அமைவாக கிழக்கு மாகாண ஆளுநர் அநுரத யகம்பத், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஜாமில் ஆகியோர் பதவி விலகத் தயார் எனவும் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, தன்னைப் பதவி விலகுமாறு எந்தவொரு அறிவித்தலும் கிடைக்கப்பெறவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார். (அ-ஒ.20)

## முள்ளிவாய்க்கால்...

தமிழர் தாயகத்தில் ஆரம்பமாகவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்த வீட்டின் முன்னால் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் நருதனார் மடம் சந்தியிலும், காரைநகர் இந்துக் கல்லூரி முன்பாகவும், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவும், சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது. நாளை புதன்கிழமை காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாகவும், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளத்திலும், நாளைமறுதினம் வியாழக்கிழமை மன்னாரிலும், வவுனியாவிலும் வழங்கப்படும்.

தொடர்ச்சியாக 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் சிவன் கோவில், அன்பொளிபுரம், பத்திரகாளி அம்மன் கோயில், மூதூர் பகுதியிலும் 13ஆம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பங்கேற்புடன் வந்தாறுமூலை வளாகம் முன்பாகவும் செங்கலடி, ஆரையம்பதி, கல்லடி பிள்ளையார் கோயில் பகுதியிலும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் மற்றும் பொத்துவிலிலும் வழங்கப்படும். இறுதியாக மே 15 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணத்தில் முக்கியமான பாடசாலைகளுக்கு அருகில் வைத்தும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படவுள்ளது. (அ-ஒ.14,26,125)

## பிரபாகரனும்...

'பல்வேறுபட்ட தரப்புக்கள் நினைவேந்தல்களைக் கைப்பற்றவேண்டும் என்கின்றனர். அவர்கள் முதலில் நாடாளுமன்றில் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களைக் கைப்பற்றட்டும். பின்னர் நினைவேந்தல்களைக் கைப்பற்றலாம். இனத்துக்காக போராடிய போராளிகள், பாதிக்கப்பட்ட தரப்புக்கள் அமைதியாக இருக்கையில் எங்கையோ இருந்த தரப்புக்கள் துள்ளிக்குதிக்கின்றன. தியாக தீபம் திலீபன், அன்னை பூபதி நினைவேந்தல்களில் கடந்த காலங்களில் குழப்பங்கள் ஏற்பட்டன. அவ்வாறு இல்லாமல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஒற்றுமையாக மேற்கொள்ளவேண்டும். யாரும் தனி வாத்தியம் இசைக்காதீர்கள்' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலைப்பீட மாணவர் ஒன்றிய உபதலைவர் தர்சன் தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனைக் கேட்டபோது;

'நினைவேந்தல்களைக் கைப்பற்றுவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் சொல்லவில்லை. 2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இருந்ததைப்போன்றுதான் பல்கலைக் கழக சமூகம் இப்போதும் செயற்படுகின்றதா? ஊடக சந்திப்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னர் எங்களுடன் அது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துரையாடியிருக்கவேண்டும். ஒற்றையாட்சிக்குள் வரலாறுகளையும் தியாகங்களையும் முடக்கவேண்டும் என்கின்ற இந்தியா மற்றும் இலங்கையினது அடிவருடிகளே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடமிருந்து நினைவேந்தல்களைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன' என்றார் கஜேந்திரன். (அ-ஒ.26)

## கோதுமை மா,...

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் கோதுமை மாவுக்கான 3 ரூபா சுங்க வரிச் சலுகை நீக்கப்பட்டுள்ளதால் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை - ஒரு கிலோகிராம் சீனியின் விலையும் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கருத்து வெளியிட்ட ஜெயவர்த்தன, இலங்கையில் உள்ள பேக்கரிகளில் 75 சதவீதத்துக்கும் அதிகமானவை, கோதுமை மாவை இலங்கையில் உற்பத்தி செய்யும் இரண்டு நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்வதாகவும், அந்த நிறுவனங்கள் தமது விலைகளை அதிகரித்தால் மாத்திரமே பேக்கரி உற்பத்திகளின் விலைகளை அதிகரிப்போம். இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவால் பேக்கரிகளுக்கும் எவ்விதப் பிரச்சினையும் இல்லை - என்றார். (அ-ஒ.இ)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கைதடி A-9 பிரதான வீதியுடன்** 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து **700M** தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

(CS 24816) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடான் போரால்

# ஒரு மில்லியனுக்கும் அதிகமான போலியோத் தடுப்பூசிகள் அழிப்பு!

சூடானில் நடந்து வரும் மோதல் காரணமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான போலியோத் தடுப்பூசிகள் அழிக்கப்பட்டுள்ளன.

தெற்கு டார்ஃபர் பகுதியில் சூறையாடப்பட்ட அல்லது எரிக்கப்பட்டதால் சேமித்து வைக்கப்பட்ட தடுப்பூசிகள் அழிக்கப்பட்டுள்ளன என்று யுனிசெப் அறிவித்துள்ளது.

இதனால் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் போலியோ வைரஸால் பாதிக்கப்படலாம் அல்லது இறக்கலாம் என்றும் யுனிசெப் கூறி யுள்ளது. கடந்த வருடம் முதல் மலாவி, மொசாம்பிக் மற்றும் சூடான் போன்ற நாடுகளில் இருந்து போலியோ நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் 15 முதல் சூடானில் இடம்பெற்று வரும் மோதலால் 13 முதல் 14 மில்லியன் டொலர் வரை பொருள்கள் இழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. உலக உணவுத் திட்டம் உள்ளிட்ட மனிதாபிமான நிவாரண நிறுவனங்களின் உதவிகள் கொள்ளை அடிக்கப்பட்டதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)


## உடனடி வேலைவாய்ப்பு

**House Keeping** படித்து முடித்து வேலை செய்த அனுபவமுள்ளவர்கள் வேலைக்குத் தேவை.

வயது - 22 - 25
முகவரி - பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்.

CS/50216) AH-1

**076 366 9993**

## வேலையாட்கள் தேவை

வீட்டு மின் உபகரணங்கள் திருத்தும் கடை ஒன்றிற்கு பழக விரும்புபவர்கள் தேவை. (ஆண் / பெண்).
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

நல்லூர் **0777 947 247**

(CS 24815)A-1

## வேலையாள்கள் தேவை

- அலுவலக உதவியாளர்
- துப்புரவு பணியாளர்கள்

ஆண் / பெண்

இடம்: நல்லூர் (cs 24813) (N-1)

**077 792 2265**

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/ பெண் இருபாலாரும்
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): O/L, ICT, A/L,Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்:** (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர் :** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

(cr. 39799) (N-1)

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் மருதனார்மட வீதியில் இரண்டாவது ஒழுங்கையில் (சிவகுலவீதி) காணி விற்பனைக் உண்டு.




தொடர்பு:
**077 366 8282**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
## வடிவேலு பாக்கியதேவி

பிறப்பு 06.03.1947
இறப்பு 09.04.2023

திதி:- தேய்பிறை திருதியை



கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கன காலம்இருப்பீர்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
72/19, பிரம்படி லேன், கொக்குவில்.
**077 707 6077**

(CS/24789)AH-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] : 021 463 0000 - [illegible] : 021-463 1111 [illegible] [illegible]@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.